STUDY MATERIAL FOR I - YEAR

PART I - TAMIL

SEMESTER – I

Academic Year 2025-2026

Prepared by

TAMIL DEPARTMENT

KAMARAJ WOMEN'S COLLEGE

அலகு-I

இலக்கணம்:

தொல்காப்பியம்:

தொல்காப்பியம் நூல் அமைப்பு:

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற முப்பெரும் பிரிவுகளை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது, ஒன்பது இயல்களால் அமைய 27 இயல்களைக் கொண்டு விளங்குகிறது.

இறையனார் களவியல் உரை:

இறையனார் அகப்பொருள் களவு, கற்பு என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. களவியலில் 33 நூற்பாக்களும், கற்பியலில் 27 நூற்பாக்களுமாக, 60 நூற்பாக்களை உடையது. தொல்காப்பியத்தை காட்டிலும் சுருக்கமாக அமைந்துள்ளது. இந்நூலின் ஆசிரியர் நக்கீரர்.

நம்பியகப்பொருள்:

இந்நூல் அகப்பொருள் இலக்கணம் பற்றியது ஆகும். இந்நூலில் அகத்திணையில், களவியல், கற்பியல், வரைவியல், உளவியல் என்னும் ஐந்து இயல்களை கொண்டது. 252 நூற்பாக்களை உடையது.

புறப்பொருள்வெண்பாமாலை:

12 படலங்கள் உள்ளன. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை. இதில் 19 சூத்திரங்கள் உள்ளன. 361 வெண்பாக்கள் காணப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார்.

KAMARAJ WOMENS COLLEGE

நன்னூல்:

இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு பிரிவுகளை உடையது. எழுத்ததிகாரத்தில் 5 இயலும், சொல்லதிகாரத்தில் 5 இயலும் உள்ளன. இந்நூலில் உள்ள மொத்த நூற்பாக்கள் 46 ஆகும். நன்னூலின் ஆசிரியர் பவணந்தி முனிவர். தண்டியலங்காரம்

இந்நூல் மூன்று இயல்களை உடையது. பொதுவணியியல், பொருளணியில், சொல்லணியியல் என மூன்று பிரிவுகளை உடையது. பொதுவணியியல் 26 நூற்பாக்களும், பொருளணியலில் 65 நூற்பாக்களும், சொல்லணியியலில் 35 நூற்பாக்களும் என மொத்தம் 126 நூற்பாக்கள்உள்ளன.

யாப்பெருங்கலக்காரிகை:

இந்நூலின் ஆசிரியர் அமிர்தசாகரர். கி.பிபத்தாம்நூற்றாண்டினர். இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று பிரிவுகளை உடையது. செய்யுளின் உறுப்புகள் பற்றிக் கூறுவது உறுப்பியல். ஐந்து வகைப் பாடலைப் பற்றியும், அவற்றின் இனங்களைப் பற்றியும் விளக்குவது செய்யுளியல்.

இரண்டு இயல்களிலும் கூறப்படாத செய்திகளைப் பற்றி சொல்லுவது ஒழிபியல்.

1.வல்லினம் மிகும் இடங்கள்

வல்லினம் மிகும் இடங்கள் என்பது தமிழ் மொழியில் அடுத்தடுத்து இரண்டு சொற்கள் வரும் போது முதல் சொல்லின் இறுதியில் ஒரு வல்லின எழுத்துச் சேர்வதைக் குறிக்கும். ஒரு நிலை மொழியோடு வருமொழி க, ச, த, ப சிலவிடங்களில் மிகுந்தும் சிலவிடங்களில் மிகாமலும் வரும்.

KAMARAJ WOMENS COLLEGE

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.

அ + பையன் = அப்பையன்

இ + செடி = இச்செடி

எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி

பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக் கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச் சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி

விழி + புனல் = விழிப்புனல்.

KAMARAJ WOMENS COLLEGE

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு
பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு
மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்
தாமரை + கை = தாமரைக்கை.

9. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர்
பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ்
ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

2. வல்லினம் மிகா இடங்கள்

நிலைமொழி இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும் ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் எந்தெந்த இடங்களில் மிகாது.

1. அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச் சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.
அவை + பறந்தன = அவை பறந்தன.

KAMARAJ WOMENS COLLEGE

எது + தங்கம் = எது தங்கம்

2. ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.
அவனோ + பேசினான் = அவனோ பேசினான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர் பூத்தது
வண்டு + பறந்தது = வண்டு பறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்
இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்.

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்
சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர், இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ்+ கற்றார் = தமிழ் கற்றார்.
கடல் + கடந்தார் = கடல் கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த
கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

KAMARAJ WOMENS COLLEGE

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு
இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப் பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்
வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு.

3.ஈரொற்று வரும் இடங்கள்

ஒரு மெய் எழுத்துக்கு அடுத்து வேறொரு மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்துடன் வராமல் தனி மெய் எழுத்தாகவும் வருவது உண்டு. அவ்வாறு இரண்டு மெய்எழுத்துகள் சேர்ந்து வருவதை ஈர் ஒற்று என்று கூறுவர்.

ய், ர், ழ் என்னும் மூன்று மெய் எழுத்துகளை அடுத்து க்,ங்,ச்,ஞ்,த், ந. ப். ம் ஆகிய மெய் எழுத்துகள் ஈர்ஒற்றுக்களாய்ச் சேர்ந்து வரும்.

நாய்க்கால்-க்
வேய்ங்குழல் ங்
மேய்த்தல் -த்
பாய்ந்தது -ந்
காய்ச்சல் - ச்
வாய்ப்பு - ப்
மெய்ஞ்ஞானம் -ஞ்

ஒரு வரும் இடங்கள்:

உயிர் மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன்பு 'ஒரு' வரும்.

KAMARAJ WOMEN'S COLLEGE

ஒரு கப்பல்
ஒரு கனவு
ஒரு கூண்டு
ஒரு கேடயம்
ஒரு கொக்கு
ஒரு தாரகை

ஓர் வரும் இடங்கள்:

உயிரெழுத்தை முதலாகக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன்பு ஓர் வரும்

ஓர் அணில்
ஓர் இரவு
ஓர் ஊர்
ஓர் ஐயம்
ஓர் ஈசல்
ஓர் எலி
ஓள் அறிவு
ஓர் ஔடதம்

4. அது, அஃது வரும் இடங்கள்:

உயிர்மெய்யெழுத்தை முதலாகக் கொண்டு சொல்லின் முன்னே வரும்.

அது கட்டில்
அது வண்டு
அது காடு
அது சீப்பு

KAMARAJ WOMENS COLLEGE

அது சாட்டை
அது சக்கரம்
அது நன்றாக உள்ளது

அஃது வரும் இடங்கள்:

உயிரெழுத்தைக் கொண்டு தொடங்கும் சொல்லின் முன் வரும்.

அஃது அன்னம்
அமது ஆடை
அமது இலை
அஃது ஐயம்
அஃது உன்னுடையது
அஃது அருமையானது

5. தான், தாம் வரும் இடங்கள்

தான் என்பது ஒருமையைக் குறிக்கும். தாம் என்பது பன்மையை, குறிக்கும்.

தான், தன்னை, தன்னால், தனக்கு, தனது ஆகியவற்றை ஒருமைத் தொடரிலும் தாம், தம்மை, நம்மால், தமக்கு, தமது ஆகியவற்றைப் பன்மை தொடர்களிலும் பயன்படுத்த வேண்டும்.

மாடுகள் தமது தலையை ஆட்டின.
தலைவர் தமது கையால் பரிசு வழங்கினார்.
கன்று தனது தலையை ஆட்டியது.

எட்டுத்தொகை நூல்கள்:

நற்றிணை
குறுந்தொகை
ஐங்குறுநூறு
பதிற்றுப்பத்து

KAMARAJ WOMENS COLLEGE

பரிபாடல்
கலித்தொகை
அகநானூறு
புறநானூறு

எட்டுத் தொகையில் அகம் பற்றிய நூல்கள் = 5
(நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு)

எட்டுத் தொகையில் புறம் பற்றிய நூல்கள் = 2
(பதிற்றுப்பத்து, புறநானூறு)

எட்டுத் தொகையில் அகமும் புறமும் கலந்த நூல் = 1 (பரிபாடல்)

எட்டுத் தொகையில் நானூறு என்னும் எண்ணிக்கையில் குறிக்கப்படும் நூல்கள் = 4
(நற்றிணை நானூறு, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை நானூறு)

எட்டுத்தொகையில் எண்ணிக்கையால் பெயர் பெறாத நூல்கள் = 2
(கலித்தொகை, பரிபாடல்)

கலிப்பா வகையால் ஆன நூல் = கலித்தொகை

பரிபாட்டு வகையால் ஆன நூல் = பரிபாடல்மற்ற ஆறு நூல்களும் ஆசிரியப்பாவால் ஆனது. முதலும் முடிவும் கிடைக்காமல் இருக்கும்

எட்டுத் தொகை நூல்கள் = 2 (பதிற்றுப்பத்து, பரிபாடல்)

எட்டுத் தொகை நூல்களுள் காலத்தால் முந்தியது = புறநானூறு
எட்டுத் தொகை நூல்களுள்

KAMARAJ WOMENS COLLEGE

காலத்தால் பிந்தியது = பரிபாடல், கலித்தொகை

எட்டுத் தொகை நூல்களுள் முதன் முதலாக தொகுக்கப்பட்ட நூல் = குறுந்தொகை

நற்றிணை

நற்றிணை என்பது தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை என்ற சங்க இலக்கிய வகைப்பாட்டினுள் காணப்படும் ஒரு நூலாகும். இந்நூல் தனிப்பாடல்களாகப் பலராலும் பாடப்பட்டுப் பின்னர்த் தொகுக்கப்பட்டது. எட்டுத்தொகை நூல்கள் இவையெனக் குறிப்பிடும் பழைய வெண்பாவில் முதலிடம் பெற்றுத்திகழ்வது நற்றிணை ஆகும். எட்டுத்தொகை நூல்களில் "நல்" என்ற அடைமொழி பெற்ற நூல் (நல்+திணை) இதுவேயாகும். இதனை நற்றிணை நானூறு என்றும் கூறுவர். இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு 401 பாடல்கள் ஆசிரியப்பாவில் அமைந்துள்ளன. அவைகளில் பெரும்பான்மையானவை 9 அடி முதல் 12 அடிகள் கொண்ட பாடல்களாக அமைந்துள்ளன. இந்நூலைத் தொகுத்தவர் யாரென அறியப்படவில்லை என்றாலும் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். நற்றிணைப் பாடல்கள் அனைத்தும் அகப்பொருள் அமையப் பெற்ற பாடல்களாம். நற்றிணையில் 7 அடிகள் கொண்ட பாடலும் 13 அடிகள் கொண்ட பாடல்களும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குறுந்தொகை

குறுந்தொகைப் பாடல்களின் சிற்றெல்லை நான்கு அடி, பேரெல்லை எட்டு அடி. அகவற்பாவின் அமைப்பில் சுருங்கிய அடிவரையறையைக் கொண்ட பாடல் தொகுதி என்பதால்

குறுந்தொகை என்று பெயர் பெற்றது. குறுந்தொகை நூலின் செய்யுள் தொகை கடவுள் வாழ்த்தை விடுத்து 401.

இதனுள் 307, 391 ஆம் செய்யுட்கள் ஒன்பது அடி உடையன. எட்டு அடிப் பேரெல்லையைக் கடந்துள்ள இந்த இரண்டு பாடல்களும் ஐயத்திற்கு இடமானவை. 'இத்தொகை முடித்தான் பூரிக்கோ, இத் தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்' என்பது பழங் குறிப்பு. இதனைத் தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை. 10 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. எஞ்சிய பாடல்களைப் பாடியவர்களின் தொகை 205.

குறுந்தொகை நல்ல குறுந்தொகை எனப் பாராட்டு பெரும் சிறப்பைக் கொண்டுள்ளது. நான்கு அடி சிற்றல்லையும் எட்டு அடி பேரல்லையும் கொண்டுள்ளது. ஐந்திணை தழுவிய நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் பூரிக்கோ என்பவர் தொகுப்பித்துள்ளார்.

ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு மூன்று அடி முதல் ஆறு வரையுள்ள அடிக்கு உட்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை பாலை என ஐந்திணைகளையும் ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தைர், பேயனார் போன்றோர் பாடியுள்ளனர். இது 500 பாடல்களைக் கொண்டுள்ளது.

KAMARAJ WOMENS COLLEGE

பதிற்றுப்பத்து

சேர மன்னர்களைப் பற்றி 10 புலவர்கள் பாடிய நூறு பாடல்களே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். இதில் முதல் பத்தும் இறுதி பத்தும் நமக்கு கிடைக்கவில்லை. சேர நாட்டு மன்னர்களின் கொடை, வீரம் ஆட்சிச்சிறப்பை அறியலாம் பரிபாடல் என்னும் ஒருவகை பாவினால் எழுதப்பட்ட இந்நூலுக்கு பரிபாடல் என்னும் பெயர் ஏற்பட்டது. இந்நூல் 22 பாடல்களைக் கொண்டுள்ளது. திருமால், முருகன், வைகை ஆகிய வழிபாட்டுப் பாடல்களும் இதில் காணப்படுகின்றன.

கலித்தொகை

'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்ற தொடரினால் இந் நூலின் சிறப்பை அறிய முடிகின்றது. ஐந்திணைகளாகப் பிரிக்கப்பட்டு 150 பாடல்களை கொண்டுள்ளது. அக இலக்கியமாக திகழ்கிறது

அகநானூறு

அகம் என்ற பெயரில் அமைந்த பழய இலக்கிய நூலாக இது காணப்படுகின்றது. 400 பாடல்களைக் கொண்டுள்ளது களிற்றுயானை நிலை, மணிமிடைப் பவளம், நித்திலங்கோவை எனும் மூன்று பிரிவுகளாக பிரிந்து 13 அடி முதல் 31 அடிகளை கொண்டுள்ளது.

புறநானூறு

புறத்திணை பற்றி பேசும் நூல் 400 பாடல்களை கொண்டுள்ளது. பண்டைய தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் சிற்றரசர்கள் கடையெழு வள்ளல்கள் புலவர்கள் ஆகியோரின் வாழ்க்கை முறை உணவு, உடை போன்ற செய்திகளைப் புறநானூறு கூறுகின்றது.

KAMARAJ WOMEN'S COLLEGE

பத்துப்பாட்டு நூல்கள்:-

திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதலாவதாக இடம் பெற்ற நூல் நக்கீரர் என்பவர் இயற்றிய திருமுருகாற்றுப்படை. 317 அடிகளைக் கொண்ட இந்நூல் ஆசிரியப்பாவினால் ஆனது. வீடு வேறு பெற்றோர் ஒருவன் வீடு வேறு பெற விரும்பிய இரவலன் ஒருவனை முருகப்பெருமானிடம் ஆற்றுப்படுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் திருப்பரங்குன்ற முதல் பழமுதிர்ச்சோலை வரை உள்ள ஆறுபடை வீடுகள் போற்றப்படுகின்றன.

பொருநராற்றுப்படை

சோழன் கரிகாலன் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு முடத்தாம கண்ணியார் என்னும் பெண் புலவர் பாடியது. 248 அடிகளை கொண்டது. பரிசு பெற்ற பொருநன் ஒருவன் பரிசில் பெற விரும்பும் பொருநனை கரிகாலச் சோழனிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலில் பொருநனின் வறுமை, யாழ்வர்ணனை, விருந்து அளித்தல், வீரம், வெற்றி, நீர்வளம், நிலவளம் போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சிறுபாணாற்றுப்படை

ஒய்மாநாட்டை ஆண்ட நல்லியக்கோடன் என்ற சிற்றரசனைப் பாடியது. நல்லூர் நத்தத்தனார் இதன் ஆசிரியர். 269 அடிகளை உடையது. ஒருவன் பரிசில் பெற்ற பாணனை நல்லியக்கோடனிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த தொண்டைமான் இளந்திரையனை கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது. ஆற்றுப்படைகளுள் மிகவும் பெரிய

KAMARAJ WOMENS COLLEGE

நூல் இதுவாகும். இது 500 அடிகளைக் கொண்டுள்ளது. பரிசில் பெற்ற பாணன் பரிசல் பெறாத பாணனை இளந்திரையனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. விருந்தோம்பல், உப்பு வணிகரின் தன்மை, போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் மிகச் சிறிய நூல் முல்லைப்பாட்டு ஆகும். 103 அடிகளைக் கொண்டது. நப்பூதனார் இதன் ஆசிரியர். தலைவன் திரும்பி வரும் பொழுதாகிய மாலைப்பொழுதைச் சிறப்பித்து பாடப்பட்டுள்ளது. கார்கால வர்ணனை, அரசனின் பாசறை அமைப்பு முல்லைநில இயல்பு போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மதுரைக்காஞ்சி

மதுரைக்காஞ்சி மிக நீண்ட அடிகளைக் கொண்டது. 782 அடிகளைக் கொண்டுள்ளது இதன் ஆசிரியர் மாங்குடி மருதனார் பாண்டியனின் வெற்றிச்சிறப்பு, மதுரையின்வளம், மக்கள்வளம், போன்றவை கூறப்பட்டுள்ளன.

நெடுநல்வாடை

நெடுநல்வாடை 188 அடிகளை கொண்ட இந்நூல் அகவல் பாவால் அமைந்தது. பாண்டிய நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது துன்பத்தால் வாடும் தலைவிக்கு நெஞ்சாற்றுப்படையாக அமைந்தது. போர்புரியும் மன்னனுக்கு இது நல்ல வாடையாக இருப்பதை அறிய முடிகின்றது.

குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சிப்பாட்டு 261 அடிகளை உடையது. இதனைக் கபிலர் என்பவர் பாடியுள்ளார். ஆரிய மன்னனுக்கு தமிழ் கற்றுக் கொடுப்பதற்காக கபிலர் பாடியது. குறிஞ்சிப்பாட்டு ஆகும்.

KAMARAJ WOMENS COLLEGE

பட்டினப்பாலை

பட்டினப்பாலை 31 அடிகளைக் கொண்ட இந்நூல் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியுள்ளார். இந் நூலின் தலைவன் கரிகால் சோழன் ஆவான். சோழநாடு கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினம் பற்றியச் சிறப்புகள் கூறப்பட்டுள்ளது.

மலைபடுகடாம்

மலைபடுகடாம் நன்னன் செய் நன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்டு இரணிய முட்டத்துப் பெருங்கௌசிகனார் பாடியது. 583 அடிகளை உடையது. பரிசில் பெற்ற கூத்தன் பரிசில் பெறாத கூத்தனை நன்னனிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

அற இலக்கியம்

திருக்குறள்

திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளை உடையது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், இன்பத்துப்பால் 25 அதிகாரங்களையும் பெற்றுள்ளது. 1330 குறள்களால் ஆன இது 133 அதிகாரங்களை உடையது. குறுகிய வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளது.

நாலடியார்

நாலடியார் நாலடி வெண்பா யாப்பில் ஆனது. ‘ஆர் எனும் சிறப்பு விகுதியுடன் வழங்கப்படுகிறது. 400 பாடல்களைக் கொண்டது. “ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்ற பழமொழியால் பெயர் பெற்றது. 40 அதிகாரங்களைக்

KAMARAJ WOMENS COLLEGE

கொண்டுள்ளது திருக்குறளைப் போன்று அதிகாரத்திற்குப் பத்து பாடல்களைக் காணலாம்.

நான்மணிக்கடிகை

நான்மணிக்கடிகை ஒவ்வொரு பாடல்களிலும் நான்கு நான்கு கருத்துக்கள் காணப்படுகின்றன. கடிகை என்பது பெண்கள் தோலில் அணியும் ஒரு வகை அணிகலன். 4 மணிகளால் அழகாக கோர்க்கப்படும் மாலை போல நான்கு கருத்துகளைக் கொண்டுள்ளது. விளம்பிநாகனார் என்பவரால் இயற்றப்பட்டது.

இனியவை நாற்பது

இனியவை நாற்பது 40 வெண்பாக்களால் பாடப்பட்ட நூல். இனிது என்பவற்றை தொகுத்து 40 பாடல்களைக் கொண்டுள்ளது. மதுரை தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இதனை இயற்றியுள்ளார்.

இன்னா நாற்பது

துன்பம் தருவதை இன்னா என்று முன்னோர் குறித்தனர். இன்னாத செயல்களை இந்த பாடலில் காண முடிகிறது. 40 வெண்பாக்களினால் ஆனது. 124 இன்னாதப் பொருட்களை இது கூறுகின்றது.

திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி, கலந்த கலவை திரிகடுகம் எனப்படும். இம்மூன்றும் உடற்பிணியைத் தீர்ப்பது போல திரிகடுகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் வாழ்க்கையின் இன்னல்களைத் தீர்க்கும்.

ஆசாரக்கோவை

ஆசாரம்+ஒழுக்கம் கோவை கோர்த்து கூறும் நூல் ஒழுக்க கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் நூல் ஆசாரக்கோவை ஆகும்.

KAMARAJ WOMENS COLLEGE

இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார். கடவுள் வாழ்த்தோடு 100 வெண்பாக்களால் ஆனது, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பாகளைக் காண முடிகின்றது.

பழமொழி

இதன் ஆசிரியர் மூன்றுறைஅரையனார் ஆவார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் பழமொழி அமையுமாறு பாடப்பட்ட நூல் இதன் ஆசிரியர் சமண சமயம் சார்ந்தவர். கடையெழு வள்ளல்கள், கரிகாலச் சோழன், செம்பியன், குட்டுவன் போன்ற மன்னர்களை இதன் கண் காணலாம்.

சிறுபஞ்சமூலம்

சிறுபஞ்சமூலம் இது ஒரு சமண நூலாகும். காரியாசான் என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூலின் பெயர் காரணத்தை ஆசிரியரே கூறியுள்ளார். ஐந்து மூலிகை வேர்களால் ஆன மருந்து கலவை சிறுபஞ்சமூலம் எனப்படும். 102 பாடல்களைக் கொண்டுள்ளது.

முதுமொழிக்காஞ்சி

முதுமொழிக்காஞ்சி முதுமொழிகளால் கோர்க்கப்பட்ட ஒரு நூலாகும் இதன் ஆசிரியர் கூடலூர் கிழார். பத்து அதிகாரங்களாக பகுக்கப்பட்டு 10 பாடல்கள் விதம் 100 பாடல்களைக் கொண்டுள்ளது. சிறந்த பத்து அழியாபத்து, இல்லைபத்து, அல்லபத்து, எளியபத்து என்பன ஆகும்.

ஏலாதி

ஏலாதி ஏலம் + ஆதி ஏலம் முதலான ஆறு பொருட்களின் கலவை உடல் நோயைப் போக்கும். அதுபோல இந்நூலில் ஒவ்வொரு பாடலின் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மனப்பிணியைப்

KAMARAJ WOMENS COLLEGE

போக்கும். 82 வெண்பாக்களால் ஆனது. நான்கு அடிகளில் ஆறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

ஐம்பெரும் காப்பியங்கள்

ஐம்பெரும் காப்பியங்கள் அறம், பொருள், இன்பம் வீடு இந்த நான்கையும் முழுமையாக அமைய பாடுவது ஐம்பெரும் காப்பியங்கள் ஆகும்.

சிலப்பதிகாரம்

சிலம்பை மையமாகக் கொண்டு கதை அமைக்கப்பட்டதால் இக்காப்பியத்திற்கு சிலப்பதிகாரம் என்று பெயர் ஏற்பட்டது .இளங்கோவடிகள் இதன் ஆசிரியர் ஆவார். சிலப்பதிகாரம் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டுள்ளது. பத்தினிப் பெண்ணின் பெருமையைப் பேசக்கூடிய காவியமாக விளங்குகின்றது. சேரர், சோழர், பாண்டியர் போன்ற மூவேந்தர்களின் பெருமையை எடுத்துக் கூறுகிறது. கண்ணகி கோவலன் உடைய வாழ்க்கையை முழுமையாக இது கூறுகின்றது.

மணிமேகலை

கோவலன், மாதவி இவர்களின் மகளான மணிமேகலையின் கதையைக் கூறுகிறது. தமிழில் தோன்றிய இரண்டாவது காப்பியமாகும். இதனை காப்பியங்கள் என்றும் கூறுவர். 'மணிமேகலை துறவு' மேற்கொண்டதைப் பற்றி சொல்வதால் இதற்கு மணிமேகலை துறவு என்ற பெயரும் உண்டு. புத்த சமய கருத்துக்களைக் கூறுகின்றது.

சீவக சிந்தாமணி

சீவக சிந்தாமணி இதன் ஆசிரியர் திருத்தக்கத் தேவர் மதுரை தமிழ்ச் சங்கத்தில் இந்நூல் இயற்றப்பட்டது. நாட்டு மன்னன்

KAMARAJ WOMEN'S COLLEGE

சச்சந்தன் விசையை ஆகிய இருவருக்கும் மகனாக தோன்றும் சீவகன் எட்டுப் பெண்களை மணந்து இறுதியாக நாட்டைக் கைப்பற்றி ஆட்சி புரிகின்றான். ஆகவே இதற்கு மணநூல் என்ற பெயரும் உண்டு. சீவக சிந்தாமணியே என்று ஒலித்ததால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

வளையாபதி

வளையாபதி சமணசமயக்காப்பியம் ஆகும். நவகோடி நாராயணன் என்னும் வணிகள் தாழ்ந்த குடியில் உள்ள பெண்ணை மணக்கிறான். அவர்களுக்கு குழந்தை பிறக்கிறது. பின்பு பிரிந்து மீண்டும் மகன் மனைவியோடு ஒன்றாகின்றான் இதுவே இதன் கதை ஆகும்.

குண்டலகேசி

குண்டலகேசி இதன் ஆசிரியர் நாதகுத்தனார். புத்த சமய காப்பியம். வணிக மரபில் தோன்றிய குண்டலகேசி என்பவள் காலன் என்னும் கள்வனைக் கண்டு அவனையே மணக்கின்றாள். பின் கருத்து வேறுபாட்டால் அவனை மலையில் இருந்து தள்ளிக் கொல்கின்றாள் பின் மனம் திரும்பி புத்த சமயத்தில் சேர்ந்து தொண்டாற்றுகிறாள்.

ஐஞ்சிறு காப்பியங்கள்

அறம், பொருள், இன்பம் வீடு நான்கு உறுதிப்பொருட்கள் ஒன்றோ, பலவோ குறைந்து வந்தால் அது சிறுக்காப்பியம் ஆகும்.

சூளாமணி

விருத்தப்பாவினால் அமைந்த சமண சமயக் காப்பியம் இதன் ஆசிரியர் தோலாமொழித்தேவர். 2131 செயுள்கள் உள்ளன. மண்ணுலக வீரனான திவிட்டன் விண்ணுலக மங்கையான சுயம்பிரபையை மணம் செய்யும் வரலாற்றைக் கூறுகின்றது.

KAMARAJ WOMENS COLLEGE

நீலகேசி

இது ஒரு சமண சமய நூலாகும். சமணமே தலைசிறந்த சமயம் என நிலைநாட்ட குண்டலகேசிக்கு எதிராக எழுந்த ஒரு வாதநூல் என்பர். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. தமிழ்மரபுக்கு ஏற்ப ஐந்திணை, நீர் வளம், நாட்டுச் சிறப்பு போன்றன அமைந்துள்ளன.

உதயணகுமார காவியம்

காப்பியத்தின் வரலாறு வடமொழி நூல்களில் காணப்படுகின்றது. உதயணன் என்பவன் மதம் பிடித்த பட்டத்து யானையை யாழிசை கொண்டு அடக்குகிறான். இந் நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

யசோதர காவியம்

"உயிர்க்கொலை தீது" என்ற நீதியைப் புகட்ட எழுந்த சமண நூலாகும். எளிய நடையில் 320 செய்யுட்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சிற்றின்பத்தின் இழிவையும், தவஒழுக்கத்தின் உயர்வையும் இந்நூல் சிறப்பித்துக் கூறுகிறது.

நாககுமார காவியம்

சமண காப்பியம் ஐந்து சருக்கங்களும், 170 விருத்தங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. கதைத்தலைவன் 519 பெண்களை மணக்கிறான். எனவே நூல் முழுவதும் மணக்காட்சியின் விவரிப்பும், சிற்றின்ப விவரிப்பும் விகுதியாக விளங்குகின்றன. இதற்கு 'நாக பஞ்சமி கதை' என்ற பெயரும் உண்டு. கௌதம கனதர சிரோனிக மன்னனுக்கு நாக பஞ்சமி கதையை விவரிப்பதாக இக்காப்பியம் அமைந்துள்ளது. நாககுமாரன் வீரத்திலும், செல்வ செழிப்பிலும் மிக்கவன். மன்னவர்கள் பலர் திறை செலுத்தி அவனுக்கு

KAMARAJ WOMENS COLLEGE

பணிவிடை செய்கின்றனர். உலக இன்பங்களைத் துறந்தால் மட்டுமே நிலையான வீடு பேற்றினை உணரலாம் என்பதை சமண முனிவரின் போதனையால் உணர்கின்றான். எனவே மகன் தேவகுமாரனிடம் அரசுரிமையை ஒப்படைத்துவிட்டு துறவி ஆகின்றான்.

பிற காப்பியங்கள்

கந்தபுராணம்;-

வடமொழியில் உள்ள 'சிவசங்கர சங்கீதை' என்னும் நூலைத் தழுவி காஞ்சி கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. தமிழ்க்கடவுள் முருகனின் பிறப்பு, அரக்கனுடனான அவனதுபோர், அவன் திருமணக் காட்சி முதலியவற்றைக் கற்பனை நயத்துடன் எடுத்துரைக்கிறார். ஆறு காண்டங்களையும் 10346 செய்யுட்களையும் உடையது.

திருவிளையாடல் புராணம்:-

சோழர் காலத்தில் 13-ஆம் நூற்றாண்டில் பெரும் பெற்று புலியூர் நம்பி என்பவரால் இக்காப்பியம் இயற்றப்பட்டது. மதுரை நகரில் சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களை 'திருவிளையாடல் புராணம்' எடுத்துரைக்கிறது. 1735 பாடல்களைக் கொண்டுள்ளது.

அரிச்சந்திர புராணம்:-

புராணங்களின் வரிசையில் அமைந்திருக்கும் இந்நூல் பதினாறாம் நூற்றாண்டைச் சார்ந்தது. வீர கவிராயரால் இயற்றப்பட்டது. உண்மைக்காக அரசிழந்து, மனையிழந்து வாடிய மன்னனின் வரலாற்றை 1225 பாடல்களில் எடுத்துக் கூறுகிறது.

KAMARAJ WOMENS COLLEGE

வில்லிபாரதம்:-

வைணவ காப்பியங்களில் ராமாயணத்தை அடுத்து சிறப்புப் பெற்றது ‘வில்லிபாரதம்’ ஆகும். இதன் நூலாசிரியர் வில்லிபுத்தூரார், ஸ்ரீ முனைப்பாடி நாட்டு சனியூரில் பிறந்தவர். கண்ணன் தூது, கர்ணன் கொடை, கர்ணனின் மரணம், அபிமன்யுவின் சிறப்பு என்பன நூலில் சிறப்பிக்கப்படுகின்றன. வில்லிபாரதம் 10 பருவங்களையும் 4350 பாடல்களையும் கொண்டுள்ளது.

நளவெண்பா:-

பாரதத்தில் காணப்படும் கிளைக் கதையினை சோழர் காலத்தைச் சார்ந்த புகழேந்தியார் பாடியுள்ளார். வெண்பாவிற்கு புகழேந்தி என சிறப்பிக்கப்படும் இவர் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். நளவெண்பா சுயம்வரகாண்டம், கலிதொடர்க்காண்டம், களிநீங்கு காண்டம் எனும் மூன்று பிரிவுகளில் 424 பாடல்களைக் கொண்டுள்ளது.

இஸ்லாமிய சமய காப்பியம்:-

தமிழகத்தில் அரேபியரின் தொடர்பு ஏற்பட்டதிலிருந்து இஸ்லாமிய சமயம் பரவத் தொடங்கியது. மாலிகாபூரின் படையெடுப்பும் பின்னர் அரை நூற்றாண்டு நடந்த முகலாயர் ராஜ்ஜியமும் தமிழகத்தில் இஸ்லாமியம் பரவ வழி செய்தன. தமிழ் முஸ்லிம்கள் இஸ்லாமிய நூல்களைத் தமிழ் ஆக்கினர். அரபு பாரசீக ஹிந்துஸ்தானிய சொற்கள் தமிழில் புகுந்துள்ளன. அருணகிரியார் 'விஞ்சையர் மாதர் சபாஷ்' எனவும், குமரகுருபர 'குறவர் மகளுக்கு சலாம், 'இதற்கு 'ஏக்கறு குமாரனை' எனவும் முறையே சபாஷ், சலாம் என்ற சொற்களை எடுத்தாண்டனர். இஸ்லாம் காப்பியத்தில் உமறுப்புலவர், ஜவ்வாது புலவர், சேகனார் புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு, செய்கு தம்பி பாவலர், வண்ணக்களஞ்சியப் புலவர்,

KAMARAJ WOMENS COLLEGE

காசிம் புலவர், குலாம் காதிர் புலவர் போன்றோர் பல நூல்களைத் தமிழ் மொழிக்கு தந்துள்ளனர்.

கிறிஸ்தவ சமயக் காப்பியம்:-

15ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியர்கள் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்றவர்கள் கிறித்தவ சமயத்தைப் பரப்ப நம் நாட்டிற்குள் நுழைந்தனர். பாதிரிமார்கள் பலர் செந்தமிழைக் கற்று அதில் ஈடுபட்டு தம்மையையும் மறந்து தமிழ் தொண்டு செயலாயினர். சமயப் பணியை விடுத்து தமிழ் பணியும், தமிழ் பற்றுமே அவர்களிடம் மேலோங்கி நின்றதை காண முடிகின்றது.

தமிழ் கிறிஸ்தவர்களால் அச்சு இந்திரம், அகராதி, உரைநடை, எழுத்துச் சீர்திருத்தம் போன்ற சிறப்புகளைப் பெற்றனர். இதழ்கள் தோன்றின, கதைகள் கட்டுரைகள், அறிவியல், தமிழ் போன்ற துறைகள் தமிழில் உருவாகின. சிகன்பால்கு ஐயர், வீரமாமுனிவர், போப்பையர், கால்டுவெல், போன்றோர் தமிழ் மொழிக்குப் பல தொண்டுகளைச் செய்தனர். மேலும் தமிழகத்தைச் சார்ந்த வேதநாயகம் பிள்ளை, எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை, வேதநாயக சாஸ்திரியார் ஆபிரகாம் பண்டிதர் போன்றோர் தமிழ் மொழிக்கு பல நூல்களை எழுதி வழங்கினர்.

KAMARAJ WOMENS COLLEGE

KAMARAJ WOMENS COLLEGE

அலகு-II

நற்றிணை

தோழி நம் காதலர் தவறாத வாய்மை உடையவர். நெடிதாகத் தோன்றும் இனிமை உடையவர். எப்போதும் என் தோள்களை விட்டுப் பிரிதல் என்பதை அறியாதவர். அத்தகைய சிறந்த அவருடைய நட்பு தேனீக்கள் தாமரையின் குளிர்ந்த தேனை எடுத்துச் சென்று உயர்ந்து நிற்கும் சந்தன மரத்தின் உச்சியில் கொண்டு வைத்த தேனடை போல சிறந்தது. தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது. அதுபோல அவர் இல்லாமல் நாம் இல்லை நம் மீது மிகவும் விருப்பம் கொண்டவர். அவர் பிரிந்தால் நம் நெற்றியில் பசலை படரும். அவ்வாறு பசலை படர்வதற்கு அஞ்சித் தடுமாற்றம் அடைவாரோ? அடைய மாட்டார்.

குறுந்தொகை

குறுந்தொகை மூன்றாம் பாடல் “நிலத்தினும் பெரிதே” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:

கருமை நிறமான கிளைகளில் பூத்திருக்கும் குறிஞ்சிப் பூக்களைக்கொண்டு மலைப்பகுதியில் பெரிய தேனை வண்டுகள் தொகுப்பதற்கு இடமாகிய நாட்டை உடைய தலைவனுடன் நான் கொண்ட நட்பு சொல்லப் போனால் நிலத்தை விட அகலத்தால் பெரியது. நினைத்தால் வானத்தை விட உயர்ந்தது. உள்ளே புகுந்து எல்லை காண முற்பட்டால் கடலை விட ஆழமானது.

ஐங்குறுநூறு

ஐங்குறுநூறு முதல் பாடல் வேட்கைப்பத்து “நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க”என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:

தாய் சேர அரசன் சிறப்பாக வாழ வேண்டும் என்றும் அவன் நாட்டில் நெல் மிகுதியாக விளையட்டும் என்றும் பொன் மிகுதியாக கிடைக்கட்டும் என்றும் விரும்பினாள் .ஆனால் நாங்கள் தலைவனும் வானனும் சிறப்பாக வாழட்டும் என்று விரும்பி வேண்டினோம். மிகுதியான அரும்புகளை உடைய ஆற்றுப் பூவரசு மரத்தினையும் மிகுதியான முக்களை உடைய மீன்வளத்தினையும் புதிய

கலித்தொகை

கலித்தொகை 51 ஆவது பாடல் (குறிஞ்சிக்கலி) "சுடர்த்தொடீஇ! கேளாய்" என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்

ஒளி வீசும் அழகிய வளையல்களை அணிந்துள்ள தோழியே! நான் கூறுவதைக் கேட்பாயாக. முன்பு ஒருநாள் தெருவில் மணல் வீடு கட்டி விளையாடுகையில் அந்த மணல் வீட்டை காலால் சிதைத்தானே ஒருவன். சிதைத்ததோடு மட்டுமல்லாமல் நம் தலையில் அன்னையர் ஆசையோடு சூட்டிய பூக்களை பறித்து எறிந்து விட்டு சென்றான் அல்லவா. அவன் ஒரு நாள் நானும் என் அன்னையும் வீட்டில் இருக்கும்பொழுது, வீட்டில் யார் உள்ளீர்கள் தாகத்திற்கு தண்ணீர் தாருங்கள் என்று நீர் வேண்டுகின்றான். என் தாய் அழகிய பொன்னால் செய்யப்பட்ட செம்பில் நீர் முகர்ந்து கொடுத்து வா என்றாள். வாசலில் நிற்பவனுக்கு நீர் அருந்த எடுத்துச் சென்றேன். அவன் யார் என்று அறியாமல் நீரை என்னிடம் வாங்கியவன் என் வளையல் அணிந்துள்ள முன்கையை பற்றினான். உடனே நான் அம்மா இவன் என்ன செய்கிறான் வந்து பார் என்று கத்தினேன். உடனே என் தாயும் அலறி ஓடி வந்தாள். நானோ சட்டென தண்ணீர் அருந்தும் பொழுது விக்கினான் என்று கூறிவிட்டேன். உடனே என் தாய் என்னை புறம் தள்ளிவிட்டு அவனது முதுகினை நீவி கொடுத்தாள். அவனும் தன் கடைக்

KAMARAJ WOMENS COLLEGE

கண்ணால் என்னைப் பார்த்து சிரித்தான். அந்த கள்வன் மகன் என்றாள் தலைவி.

புறநானூறு

புறநானூறு 189 ஆவது பாடல் “தென்கடல் வளாகம் பொதுமையின்றி” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்

ஒருவன் தெளிந்த கடல் சூழப்பட்ட உலகம் முழுவதையும் பிறருக்கு உரிமை இல்லாமல் தனக்கே உரியதாய் தன் வெண்கொற்ற குடைக்கீழ் கொண்டு வந்து ஆட்சி செய்து அனுபவித்து கொண்டு இருக்கின்றான். மற்றொருவன் பகல் இரவு என்று பார்க்காமல் நள்ளிரவிலும் உணவின் பொருட்டு வேட்டையாட விலங்கினைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றான் என்று இருக்கும் நிலையில் உலகில் யாராயிருந்தாலும் அவன் உண்பது ஒருபிடி உணவு, உடுத்திருப்பவை மேலாடை, கீழாடை என்று இரண்டே துணி, பிறவற்றை எண்ணிப் பார்த்தாலும் இருவர் பயன்பாடும் ஒன்றாகவே இருக்கும். அப்படி இருக்கும் போது செல்வத்தைச் சேர்த்து வைத்து என்ன செய்யப் போகிறோம். அனுபவிக்கலாம் என்றால் மிஞ்சித் தப்பிவிடும். அனுபவிப்பவரின் ஆயுள் காலமோ குறைவு .அதனால் செல்வத்துப் பயனே ஈதல் ஒன்றே ஆகும்.

“நாடா கொன்றோ” என்று தொடங்கும் பாடல் கருத்துக்கள்: நாடாய் இருந்தால் என்ன? காடாய்இருந்தால் என்ன? பள்ளமான பகுதியாக இருந்தால் என்ன? அல்லது மேடான பகுதியாக இருந்தால் என்ன? எங்கே ஆண்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அந்த நிலம் வாழ்வதற்கு உரிய நல்ல இடம் ஆகும் என்கிறார் ஔவையார்.வருவாய் எனையும் உடைய எங்கள் தலைவன் வானுடன் சிறப்பாக வாழ்க என்று விரும்பினோம்.

KAMARAJ WOMENS COLLEGE

முல்லைப்பாட்டு:

முன்னுரை

முல்லைப்பாட்டு ஒரு பண்பாட்டு சுரங்கம். வாழ்வியல் பெட்டகம். தமிழர்தம் வாழ்க்கையை காட்டும் ஓவியம். உலகளாவிய அளவில் தமிழரின் பெருமையை உணர்த்தும் ஒப்பற்ற இலக்கியம். பத்துப்பாட்டில் மிகச் சிறிய இலக்கியமான முல்லைப்பாட்டு 103 அடிகளைக் கொண்டது. இதனை இயற்றியவர் காவிரிப்பூம்பட்டினத்து பொன்மாணிக்கம் மகன் அப்போதனார். இந்நூல் முல்லைத்திணையின் உரிப்பொருளாகிய ஆற்றிஇருத்தலை மையமாகக் கொண்டு அமைந்ததாகும்.

மகளிர் தெய்வத்தை வழிபடல்:

மாலைப்பொழுதில் பெருமுது பெண்டீர் ஊரின் புறத்தே சென்று அரும்புகள் மலரும் முல்லைப் பூக்களை நாளிதில் கொண்ட நெல்லோடு தூவி தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டு நின்றனர்.

பாசறை அமைவிடம்:

காட்டாறு சூழ்ந்த அகன்ற காட்டின் கண் செடிகளையும், புதர்களையும் வெட்டி வேடரின் அறங்களை அழித்து முள்வேலி இட்டு கடல் போன்ற பரப்புடன் பாசறை அமைக்கப்பட்டது.

மங்கையர் விளக்குகளை ஏற்றுதல்:

அரசனின் பாசறையில் வளையணிந்த முன் கையினையும், கூந்தல் அசையும் முதுகுணையும் பிடி அமைந்த வாளினை சேர்த்துக் கட்டிய கட்சியினையும் உடைய மகளிர் பாவை விளக்கில் நீண்ட திரியை இட்டு நெய்வார்க்கும் குழாயால் நெய்வார்த்து விளக்கேற்றினர்.

KAMARAJ WOMENS COLLEGE

நாளிகை கணக்கர் பொழுது அறிவித்தல்:

பொழுது அளந்து அறிவித்தலை பொய்க்காமல் சொல்ல வல்ல நாழிகைக்கணக்கர்கள் அரசு உயர்ந்த இவ்வுலகில் பகைவரை வெல்லச் செல்கின்ற அரசனே! உம்முடைய நாழிகை வட்டியில் சென்ற நாழிகை இவ்வளவு காண்பாயாக என்று மன்னனுக்கு அறிவித்தனர். வேந்தன் மனநிலை அப்பள்ளியறையில் மன்னன் ஒரு கையை படுக்கையின் மேல் வைத்தும் கடகமனிந்த மற்றொரு கையால் தலையை தாங்கியும் உறக்கமின்றி போரினை நினைத்தவனாய் விழித்திருக்கின்றான்.

பகைவர் எறிந்த வேல் பட்டமையால் புண்பட்டு பெண் யானைகளை மறந்த களிறுகளையும் பகைவரது யானைகளின் துதிக்கையினை வெட்டி வீழ்த்தி செஞ்சோற்று கடன் தீர்த்து போரிலே வீர மரணம் அடைந்த வீரர்களையும், பாதுகாப்புக்காக அணியப்பட்ட தோற்படைசையை அறுத்து பகைவரின் அம்பு பாய்ந்ததால் புண்பட்டு செவி சாய்த்து புல் உண்ணாமல் வருந்தும் குதிரைகளையும் நினைத்தவனாய் மன்னன் உறக்கமின்றி இருக்கின்றான்.

பாசறையில் வெற்றி முழக்கம்:

மறுநாள் போரில் பகைவரை வென்று வெற்றியைத் தேடித் தந்தமையால் பகை மன்னர் நடுங்கும்படி பாசறையில் வெற்றி முரசு முழங்க வினைமுடிந்த செம்மையில் இனிதாக துயில் கொண்டான் மன்னன்.

தலைவி ஆற்றி இருத்தல்:

வினைமுடித்து இனிது துயிலும் தலைவனின் வருகையை காணாத தலைவி துன்புற்று வருந்துகிறாள். தலைவன் ஆற்றியிருப்பாயாக என்று கூறிய சொல்லை மீறுவது கற்புக்கு

KAMARAJ WOMENS COLLEGE

இழுக்கு என்று நினைத்தவளாய், மனம் தேறி கழண்டு ஓடும் வளையல்களை திருத்தி ஆற்றி இருக்க உறுதி கொள்கிறாள், எனினும் பிரிவு அவளை வருத்த பெருமூச்சுவிட்டு அணிகலன்கள் நெகிழ அம்பு தைத்த மயில் போல் நடுங்குகிறாள். தலைவனது மாளிகையில் மழை நீர் கூடி விழும் கூடல் வாயிலிருந்து விழுகின்ற அருவி போன்ற மழை நீரின் ஓசையையும், வேறு பல இனிய ஓசைகளையும் கேட்டவாறு நெஞ்சம் ஆற்றுகின்ற தலைவியின் காதுகள் நிறையும்படியாக தலைவன் வரும் ஆரவார ஓசை எழுந்தது.

முடிவுரை:

இவ்வாறு இயற்றிய முல்லைப்பாட்டானது முல்லை நிலத்து தலைவன், தலைவியரின் ஒத்த அன்பையும், தலைவனின் பிரிவு துயரால் தவிக்கும் தலைவியின் மனத்தையும், குறிப்பாக தலைவியின் ஆ ற்றி இருத்தல் தன்மையையும், எழில் ஓவியமாய் உயிர் உடன் வெளிப்படுத்தியுள்ளது. முல்லை சான்ற கற்பு என்னும் அகத்தினணக் கொள்கையை இயற்கை அழகுடனும், அழகியல் உணர்வுடன் எடுத்துரைக்கிறது முல்லைப்பாட்டு.

KAMARAJ WOMENS COLLEGE

KAMARAJ WOMENS COLLEGE

அலகு-III

திருக்குறள்

அறன் வலியுறுத்தல்

மனதால் நேர்மையுடன் இருப்பதே அறம். அப்படி அறமுடன் இருப்பவர்க்கு செல்வமும், சிறப்பும் வளரும். அறத்தை மறுப்பவர் வாழ்வில் வீழ்ச்சி உறுதி. அழிக்கும் குணம், அளவற்ற ஆசை, கடும் கோபம், வன் சொல் இவை நான்கும் இல்லாமல் இருப்பதே அறம்.

1. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
   ஆக்கம் எவனோ உயிர்க்கு.

அறத்தின் பால் ஈடுபாடு கொண்டு அதன்படி செயல்படுபவர்களுக்குதான் சிறப்புகளும், செல்வமும் வந்து சேரும்.

2. அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
   மறத்தலின் ஊங்கில்லை கேடு.

அறத்தைப்போல் உயர்வைத் தருவது வேறு இல்லை. அறத்தை மறுத்தால் உயர்வு இல்லை, கேடுதான் விளையும்.

3. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
   செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

எங்கெங்கு எப்படியெல்லாம் அறத்தைச் செயல்படுத்த முடியுமோ, அங்கெல்லாம் இயன்றவரை அறத்தைச் செயல்படுத்துவதே சிறப்பு.

4. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
   ஆகுல நீர பிற.

மனத்தளவில் குற்றம், குறை இல்லாமல் இருப்பதே அறம். மற்ற செயல்கள் எல்லாம் வெறும் சடங்குகளே.

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

அழிக்கும் குணம், அளவற்ற ஆசை, கடும் கோபம், வன்சொல் இந்த நான்கும் இல்லாமல் இருப்பதே அறம்.

6. அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

நேரம் காலம் பார்த்துச் செய்வது அறமாகாது. காலம் கடந்து செய்யப்படும் அறமானது பயனில்லாமல் போய்விடும்.

7. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

பல்லக்கில் செல்பவனுக்கும், அந்தப் பல்லக்கை சுமப்பவனுக்கும் உள்ள வேறுபாட்டை அறியாமல் இருப்பது அறமாகாது.

8. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அ:.தொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.

வாழ்நாளில் மற்றவர்களுக்குச் செய்யும் நல்லவைதான், அந்த வாழ்நாளுக்கான பலன்.

9. அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

அறச் செயல்களைச் செய்வதால் கிடைப்பதுதான் இன்பம். மற்றவற்றால் கிடைப்பது இன்பமும் இல்லை, புகழும் இல்லை.

KAMARAJ WOMENS COLLEGE

10. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

அறத்தின்பால் செயல்படும் ஒருவருக்கு, பிறவற்றால் ஏற்படும் பழிகளும் உயர்வைத் தரும்.

2.நாலடியார்

நாலடியார் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது நான்கு அடிகளைக் கொண்டது. நாலடியார் பாடல்களை இயற்றியோர் பெயர் தெரியவில்லை. சமண முனிவர் நானூறு பேர் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். இது வேளாண்வேதம், நாலடி நானூறு என்றும் கூறப்படுக்கிறது. இந்நூல் திருக்குறளைப் போன்று ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் கூற்று இதன் பெருமையை கூறுகின்றது. ஜி.யு.போப் இதனை ஆங்கிலத்தில் பெயர்த்துள்ளார்.

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்.......

பொருள்:

தலைமுடியைச் சீர்ப்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதினால் ஏற்படும் அழகும் அழகல்ல. நாம் உண்மை நெறிக்கு ஏற்ப நடுவுநிலைமையுடன் வாழ்கிறோம் என்ற பெருமிதமும், அப்படி வாழ்வதற்கான நெறிகளைக் கற்றுத்தந்த கல்வியினால் நாம் பெறும் அழகே உண்மையான அழகாகும்.

3.நான்மணிக்கடிகை

விளம்பி நாகனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டது.இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர். இந்நூல் நூற்றியொரு

KAMARAJ WOMENS COLLEGE

பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளால் ஆனது இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றிலும், நான்கு மணியான கருத்துகள் சொல்லப்படுகின்றன. இதனாலேயே இது நான்கு வகை மணிகளால் ஆனதால் நான்மணிக்கடிகை என்று அழைக்கப்படுகிறது.

நிலத்துக்கு அணியென்ப நெல்லும்........

பொருள்:

பசுமையாகக் காணப்படும் நெல்லும், கரும்பும் வயலுக்கு அழகைத் தருகின்றன. நீர் நிறைந்த குளத்திற்குத் தாமரைக் கொடியின் இலையும் மலரும் அழகைத்தருகின்றன. பெண்மைக்கு அழகு நாணமுடைமை. அதுபோல பிறருக்குச் செய்கின்ற அறச் செயல்கள் ஒரு மனிதனுக்கு அழகைத் தருகின்றன.

4.பழமொழி

பழமொழி நானூறு அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு பாடல்களைக் கொண்ட நீதிநூலாகும். சங்கம் மருவிய காலத்தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. பழமொழியில் சங்க கால மன்னர்கள், வள்ளல்கள் பற்றிய குறிப்புகள் பல இடம்பெற்றுள்ளன.

தம் நடை நோக்கார், தமர் வந்தவாறு அறியார்...............

பொருள்:

தலைவனே! தன்னைப் பற்றியும் அறியாது, தம் சுற்றத்தார் பற்றியும் அறியாது, நல்லொழுக்க நெறியும் அறியாது, சின்னவர்போல் ஆகாது உன்னை நீயே அறிந்துகொள். உன் உயர்ந்த

KAMARAJ WOMENS COLLEGE

குடிக்கேற்ற ஒழுக்கத்தின்படி நடந்துகொள். ஏனென்றால், உன்னைப் பற்றி அறிந்தவர் உன்னைவிட வேறு எவரும் இருக்க முடியாது.

5.இனியவை நாற்பது

பூதஞ்சேந்தனார் என்பவர் இயற்றிய நூல் இனியவை நாற்பது. இது நாற்பது வெண்பாக்களினால் ஆனது. பண்டைக்காலத் தமிழ்நூல் தொகுப்புக்களில் ஒன்றான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் இதுவும் ஒன்று. உலகில் நல்ல அல்லது இனிமையான விஷயங்களை எடுத்துக்கூறுவதன் மூலம் மக்களுக்கு நீதி புகட்டுவதே இந்நூலின் நோக்கம்.

இளமையை மூப்பென் றுணர்தல் இனிதே ....

பொருள்:

இளவயதிலேயே முதுமை தரும் மனப்பக்குவம் கொண்டிருப்பது, உறவினர்கள் அன்பு மொழிகள் கூறுபவராக இருப்பது, மென்மையான மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட தளிர் போன்ற இளம் பெண்கள் நஞ்சைப் போன்றவர் எனத் தெளிவடைவது, ஆகியன நன்மை தருவனவாம்.

KAMARAJ WOMENS COLLEGE

அலகு-IV

காப்பியஇலக்கியம்:

1.சிலப்பதிகாரம் (வழக்குரை காதை)

கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியன் முன்பு வழக்குரைத்த திறம்:

கணவனை இழந்த கண்ணகி பாண்டிய நெடுஞ்செழியனது அரண்மனையை அடைந்தாள். தன் ஒற்றை சிலம்பினால் மன்னன் முன்பு வழக்காடி தன் கணவன் கள்வன் அல்லன் என்று உலகறிய பறைசாற்றுவது பற்றி இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. யாரையோ நீ மடக்கொடி? வாயிற்காவலன் கண்ணகி வருகையை மன்னவனுக்கு உணர்த்த மன்னவன் அவளை அழைத்து வருமாறு ஆணையிட்டான். வாயிலனும் கண்ணகியிடம் வந்து அவளை அழைத்துச் சென்று கோயில் கண் மன்னனைக் காட்ட கோயில் மன்னனை குறுகினள். பாண்டியனும் கண்ணகியை நோக்கி நீர் ஒழுகும் கண்களோடு என் முன் வந்து நிற்கும் இளங்கொடி போன்றவளே! நீ யார்? என்று கேட்டான். தேரா மன்னா! செப்புவது உடையேன். கண்ணகி உடனே பாண்டியன் நெடுஞ்செழியனிடம் ஆராய்ச்சி இல்லாத மன்னனே! என்னிடம் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு கேள். இகழ்தலற்ற சிறப்பினை உடைய தேவர்களும் இரும்பூது எய்துமாறு புறா ஒன்றின் துன்பத்தை போக்கிய சிபியும், கட்டிய மணியின் நடுவில் உள்ள நாவானது அசைய பசுவின் கடைக் கண்களில் இருந்து ஒழுகும் நீர் தனது உள்ளத்தைச் சுட தானே தன் அரும்பெறல் புதல்வனை தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழனும், ஆண்ட மிக்க புகழினை உடைய புகார் நகரமே நான் பிறந்த ஊர் ஆகும். ஊரின் கண் ஏசாச் சிறப்பினையும், இசை விளங்கும் இயல்பினை உடைய பெருங்குடி கண் மாசாத்துவான்

KAMARAJ WOMEN'S COLLEGE

என்னும் வாணிபனுக்கு மகனாகத் தோன்றி பொருளீட்டி வாழ்க்கை நடத்துதலை விரும்பி, முன்னே தீவினை செலுத்தலால் வீரக்கழல் அணிந்த மன்னனே! நினது மதுரை நகரத்தினுள் புகுந்து இங்கு என் காற் சிலம்பு ஒன்றினை விற்றல் காரணமாக உன்னிடத்தில் கொலையுண்ட கோவலன் மனைவி நான். என் பெயர் கண்ணகி என்றாள். பாண்டியநெடுஞ்செழியன் இதனை கேட்டு பெண்ணணங்கே கள்வனை கொலை செய்தல் கொடுங்கோன்மை அன்று. அதுவே அரசு நீதியும் ஆகும் என்றான். கண்ணகி அவனை நோக்கி அறநெறியில் செல்லாத கொற்கை வேந்தே! என் காற் சிலம்பு மாணிக்கக் கற்களை பரல்களாக கொண்டது என்றாள். உடனே மன்னவன் தேன்மொழி உரைத்தது செம்மை பொருந்திய நன்மொழியாகும். எமது சிலம்பு முத்துக்களை பரல்களாக உடையது என்று கூறி, பின் ஏவலரை நோக்கி முன்னர் கோவலனிடம் இருந்து பெற்ற சிலம்பை கொண்டு வருக என கட்டளையிட்டு வருவித்து தானே அதனை கண்ணகியின் முன்பு வைத்தான். கண்ணகி அச்சிலம்பினை எடுத்து உடைத்த அளவில் அதனின்றும் எழுந்த மாணிக்கப்பரல் ஒன்று பாண்டியன் மீதுதெரித்து கீழே விழுந்தது. யானோ அரசன்? யானை கள்வன் அங்ஙனம் தெறித்த மாணிக்கப் பரலைக்கண்டு துடித்த பாண்டியன் தாழ்ந்த குடையனாய், தளர்ந்த செங்கோலனாய், பொற் கொல்லன் பொய்யுரை கேட்டு நீதி தவறிய யாரும் அரசன் அல்லேன் என்று துணிந்து, அக்கோவலன் கள்வனல்லன், யானே கள்வன். மக்கள் கூட்டத்தைக் காக்கின்ற பாண்டிய நாட்டு ஆட்சி என்னை முதலாகக் கொண்டு தவறிவிட்டது. என் ஆயுள் கெடுக எனக் கூறி மன்னவன் மயங்கி விழுந்து உயிர்விட்டான். கணவனை இழந்தவள் ஆகிய கோப்பெருந்தேவி உள்ளம் குழைந்து, உடல் நடுங்கினாள். தாய், தந்தையரை இழந்தவர்க்கு அம்முறை சொல்லி பிறரைக் காட்டி ஆறுதல் கூற முடியும். ஆனால் கணவனை இழந்தோர்க்கு அங்ஙனம் சொல்லி

KAMARAJ WOMENS COLLEGE

காட்டலாவது ஒன்று இல்லை எனக் கருதி தன் கணவனின் இணையடிகளை தொட்டு வணங்கி இறந்தாள்.

முடிவுரை: கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்து வென்ற திறம் போற்றுதற்குரியதாக அமைகிறது

2.மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை:

மணிமேகலைக்கு அமுத சுரபி கிடைத்த விதம்:

மணிமேகலை மணிமேகலா தெய்வத்தால் மணி பல்லவத் தீவில் விடப்பட்டாள். அங்கே தீவதிலகையைச் சந்தித்தாள். அவள் அமுதசுரபி பாத்திரத்தின் சிறப்புகளையும் எங்கு எப்போது கிடைக்கும் என்பதையும் விவரித்தார்.

தீவதிலகை சந்திப்பு.

தீவதிலகை இந்திரனின் ஏவலால் புத்தப்பீடிகையை காத்து வருபவள். அவள் ரத்தின தீவில் உள்ள சம்பந்தம் மலைக்குச் சென்று திரும்பிய போது ஒரு பெண் அங்கே நின்று இருப்பதை பார்த்தாள். கப்பல் கடலில் கவிழ்ந்து விட்டால் இத்தீவிற்கு சிலர் வருவது வழக்கம். அதனைப் போல இப்பெண் வந்திருப்பாள் என எண்ணி, பெண்ணே! நீ யார்? என வினவினாள். அதற்கு மணிமேகலை நான் முற்பிறவியில் பூமியை ஆண்ட ராகுலனின் மனைவி லட்சுமி. கலைமகள் மாதவியின் மகள் மணிமேகலை என்றாள். தீவதிலகையை நோக்கி நீ யார்? எனவும் வினவினாள். அதற்கு தீவதிலகை தன்னைப் பற்றி விவரித்தாள். அமுதசுரபி பாத்திரம் குறித்தும் எடுத்துரைத்தார்.

அமுதசுரபி தோன்றும் நாள்:

புத்தபீடிகை முன்பு குவளை மலர்களும், நெய்தல் மலர்களும், கலந்து விளங்கும் பொய்கை ஒன்றுண்டு. அதில் இளவேனிற்

KAMARAJ WOMENS COLLEGE

காலத்தில் வைகாசி மாதம் 13 நாட்கள் சென்ற பின்பு மீனம் நாளில் புத்த பீடிகை முன்னர் ஆபுத்திரன் கைகளில் இருந்த அமுதசுரபி என்னும் பாத்திரம் தோன்றும். இன்று அந்த நாள் ஆகும். எனவே நாம் இப்போது அங்கு செல்வோம் என்று தீவதிலகை மணிமேகலையை அழைத்துச் சென்றாள்

விசித்திர பாத்திரத்தின் சிறப்பு: உயிரின் மருந்தாக அமையும் உணவினை அப்பாத்திரத்தில் விட்டால் அது குறைவின்றி பெருகும் தன்மை கொண்டது. வாங்குபவர் கை வருந்தும் அளவிற்கு உணவு சுரந்து கொண்டே இருக்கும். இதனைப் பற்றி அறவண அடிகளிடம் கேட்டு மேலும் தெரிந்து கொள்வாயாக என்றும் தீவதிலகை அறிவுறுத்தினாள். மணிமேகலையும் தான் முன்பு செய்த சாது சக்கரம் என்னும் முனிவருக்கு செய்த தானமே இப்பாத்திரம் கிடைக்க காரணம் என்று மனதில் எண்ணினாள். அங்கிருந்து மந்திரத்தால் வானூர்ந்து நாவலன் தீவு வந்து சேர்ந்தாள்

3. பூசலார் நாயனார் புராணம்:-

தொண்டை நாட்டில் உள்ள திருநின்றவூரில் பூசலார் எனும் பெரியவர் வாழ்ந்து வந்தார். சிவபெருமானின் மீது மிகுந்த பக்தியின் காரணமாக சிவன் அடியார்களுக்கு சிவத்தொண்டு செய்து வந்தார். இறைவனுக்கு தன்னுடைய முயற்சியினால் கோயில் கட்ட வேண்டும் என்பது அவருடைய மிகப்பெரிய ஆசை எனினும் பொருள் இல்லாத காரணத்தினால் இறைவனுக்காக மனதிலே கோயில் கட்ட வேண்டி தன் மனதாலே தச்சர்களையும், அதற்குத் தேவையானப் பொருட்களையும் தேடி படிப்படியாக கோயில் கட்ட முடிவு செய்தார். நல்ல நாள் பார்த்து நாள் செய்து கட்டுமானப் பணியைத் தொடங்கி ஒவ்வொரு பணியையும் மனம் உருகி கலைநுட்பத்துடனும் சிற்ப வேலைபாடுகளுடன் தனது மனக்கோயில் கட்டி இறைவனை எழுதுவதற்கான நாளையும் குறிப்பிட்டு

KAMARAJ WOMEN'S COLLEGE

குடமுழுக்கு நடத்துவதற்கும் ஏற்பாடு செய்தார். அதே நேரத்தில் மன்னன் காடவர்கோன் இறைவனுக்காகக் கோயில் கட்டி குடமுழுக்கு நடத்த தயாரானார். ஒருநாள் இரவில் காடவர்கோன் கனவில் சிவபெருமான் தோன்றி உன்னுடைய கோயிலில் "என்னால் எழுந்தருள இயலாது பூசலார் நாயனாரின் கோவிலில் நான் எழுந்தருள உள்ளேன்" என கூறிச் சென்றார் கோயிலை காண வேண்டி காடவர்கோன் திருநின்ற ஊருக்கு வந்து பூசலாரைப் பற்றி விசாரிக்க அவ்வாறு கோயில் ஒன்றும் இல்லை என ஊரில் உள்ளவர்கள் கூறினார்கள். நேராக பூசலாரைச் சென்று தங்கள் கட்டியக் கோயில் உள்ளது என்பதையும் அதற்கான குடமுழுக்கு நாள் இன்று என்பதையும் நான் சிவபெருமான் வழியாக அறிந்து கொண்டேன். கோயில் எங்கு உள்ளது என கேட்டார் அதற்கு தன் மனத்துளே இறைவனுக்கு நான் கோயில் கட்டி உள்ளேன் என பூசலார் கூற அதனை வியந்து பக்தியின் திறன் அறிந்து மகிழ்ந்த காடவர்கோன் பூசலாரை வணங்கி அவர் கட்டிய கோவிலில் உள்ள சிவபெருமானை வணங்கி விடைபெற்றுச் சென்றார் இறைவனின் பக்திக்கு அகக் கோவிலே போதுமானது என்பதைப் பூசலார் நாயனார் நிரூபித்து காட்டினார்.

4.கம்பராமாயணம்:-

குகப்படலம்:-

அயோத்தி விட்டு நீங்கிய ராமன், லக்ஷ்மணன், சீதா தேவி ஆகியோர் கங்கைக் கரையைக் கடக்க வேண்டி தவசாலை அமைத்து தங்கி இருந்தனர். அப்போது சிருங்கிபேரம் என்னும் ஊரில் தலைவரான வேடுவகுலத் தலைவன் குகன் ராமனைச் சென்று வினவினான். அப்பொழுது ராமன் கங்கை கரையைக் கடக்க எங்களுக்கு நாவாய் தரவேண்டும் என வேண்டினான். ராமனின் மீது பக்தி கொண்ட குகன் அன்று இரவு ராமனோடு தங்கி இருக்க

KAMARAJ WOMENS COLLEGE

வேண்டினான். ராமனின் கதையை கேட்ட குகன் அன்று இரவு முழுதும் கண்ணீர் வடிய அவர்களுக்கு காவல் இருந்தான். மறுநாள் காலையில் நாவாய் கொண்டு வந்து அவர்களைக் கங்கைக் கரையைக் கடந்து அக்கறையில் சேர்த்தான். அப்பொழுது குகன் தானும் தங்களோடு வருவதாக கூறினார். ராமன் நீ உன் ஊரிலேயே இருந்து உன் மக்களுக்கு காவலாய் இரு மீண்டும் இவ்வழியே வரும் பொழுது நிச்சயமாக உன் ஊரில் தங்கிச் செல்வேன் என்று விடை பெற்று மூவரும் காட்டுக்குள் சென்றனர்.

5.சீறாப் புராணம்:

தமிழில் எழுதப்பட்ட தலைச்சிறந்த இசுலாமிய இலக்கியம் சீறாப் புராணம் ஆகும். இந்நூல் இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தமிழ்மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒரு காவியம். இதனை இயற்றியவர் உமறுப் புலவர் ஆவார். அதே காலத்தில் வாழ்ந்த வள்ளல்சீதக்காதி, அபுல்காசிம் ஆகியோரின் ஆதரவை பெற்றார். இதன் ஆசிரியரான உமறுப்புலவர். இதன் தொடர்ச்சியான சின்னசீறா என்னும் நூலினை பனி அகமது மரைக்காயர் படைத்துள்ளார். ஐந்தறிவு கொண்ட உயிர்கள் மீதும் அவர் செலுத்திய அன்பு மானுட சமுதாயம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம், இப்படலத்தில் வேடனிடம் அகப்பட்ட மான் ஒன்று தன் வரலாறை நபிகளிடம் கூறும் இடம் அவலச்சுவை மிகுந்ததாகும்.

மான் தன் வரலாறு கூறுதல்:

வளம் நிறைந்தஅக்காட்டில்நபிகள் நாயகத்தைக் கண்ட மான் தன் வாலைஆட்டி தன் கழுத்தை உயர்த்தி வள்ளலாகிய முகம்மது நபியே! எனச் சொல்லி அவரைத் துதித்து, சலாம் கூறி தன் கதையைச் சொல்லத் தொடங்கியது.

KAMARAJ WOMENS COLLEGE

இனிய குடும்பம்:

"வல்லமை பொருந்திய சத்திய தூதுவரே! எனது வார்த்தைகளைக் கேட்டு விரைவாக அருள் புரிதல் வேண்டும்! என் உயிரைப் போலும் பிரியாத என் மான் இனமும் ஆண்மானும் குட்டியும் நெருங்கி ஒன்று சேர்ந்து பசிய புற்கள் நிறைந்த இடங்கள் தோறும் மேய்ந்து, தினமும் மேலோங்கி நிற்கும் பசியைப் போக்கி தீய உயிரைப் பறிகொடுக்காமல், மனதில் அச்சத்தைப் போக்கி,தீய மலைச்சாரலில் இனிதாக வாழ்ந்து வந்தோம்.தனியாளாகியஎன் உயிரும்என்னைக் காக்கும் ஆண்மானினது உயிரும் ஒன்று சேர்ந்து நான் ஓர் இளங்கன்றைப் பெற்றேன், அதனால் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கித் துன்பங்களை ஒழித்தேன்.

வரிப்புலியின் முழக்கம்:

நாங்கள் மேய்ந்து கொண்டிருந்த அந்தத் திசைக்கு எதிர்ப்புறமாக ஒரு வரிப்புலியின் முழக்கம் ஓர்இடியின் ஓசை போன்று இவ்வுலகம் அதிரும் படி ஒலிக்க, அம்முழக்கத்தைக் கேட்ட எங்கள் மான் கூட்டமானது நாலாப்புறம் தனித்தனியாகச் சிதறி ஓடியது.

வேடனிடம்அகப்படல்:

அவ்வாறு வேறொரு காட்டின்கண் போய்ச் சேர்ந்தேன். அங்கு சேர்ந்த சமயத்தில் இந்த அரபி வேடன், மறைவாகக் கயிற்றால் கட்டப்பட்டிருந் தனது வலையை சுருக்கி இழுக்க, அவ்வேடன் ஓடி வந்து, "என் உடலை வருத்தும் பசிக்கு நீ இன்று எனக்கு உணவாக வந்து சேர்ந்தாய்" என்று சொல்லி என்னைக் கட்ட ஒரு கயிற்றை எடுத்தான்.

KAMARAJ WOMENS COLLEGE

பிணையாக நிற்றல் வேண்டும்:

நான் சென்று என் குட்டிக்குப் பால் கொடுத்து, ஆண் மானையும் தேற்றி, என் உறவினரிடம் சொல்லி விட்டு வருவேன். தயவுசெய்து எனக்காகப் பிணையாக இருக்க வேண்டும் என்று கெஞ்சிய மான் மீது இரக்கம் கொண்ட நபிகள் அவ்வாறே செய்ய வாக்களித்து வேடனிடம் மானை விடும்படி கேட்டார். வேடன் சம்மதித்து, நபிகளைப் பிணையாக நிறுத்தி மானை விடுவித்தான். மானும் மகிழ்ச்சியுடன் சென்று தன் குட்டிக்குப் பாலைக் கொடுத்தது. ஆண் மானிடம் நடந்ததைக் கூறிப் புறப்பட்டது. அப்போது தாய்மானுடன் குட்டியும் உடன் புறப்பட்டு வேடனிடம் வந்தது. இருமான்களும் வருவதைக் கண்டான் வேடன் .அவ்விரு மான்களின் செயலைக் கண்டு வேடன் மனம் மாறி இஸ்லாமியத்தைப் பின்பற்றினான்.

6. இயேசு காவியம்

இயேசு காவியம் தற்காலத்தில் எழுதப்பட்ட காப்பிய நூலாகும். கண்ணதாசன் இக்காவியத்தை எழுதியுள்ளார். பாவம் செய்தால் தண்டிக்கும் கடவுளை மட்டுமே அறிந்திருந்த மக்களுக்குத் திருந்திய பின்னர், கடவுள் அன்புடன் ஏற்றுக் கொள்வார்' என்ற அறிவுரையை உணர்த்துவதாக அமைந்த உவமைக் கதையைக் கவிஞர் கண்ணதாசன், 'ஊதாரிப்பிள்ளை' என்ற தலைப்பில் கூறியுள்ளார்.

ஊதாரிப்பிள்ளை கதை:

இக்கதையைக் கேட்பவர்களின் வாழ்க்கை மேன்மையடையும். சரியான பாதையில் வழிப்படுத்தவும் செய்யும். அந்த நோக்கில் நேர்த்தியான தலைப்பிட்டு கவிஞர் கண்ணதாசன் 'ஊதாரிப்பிள்ளை' கதையைக் கவிதை வடிவில் எழுதியுள்ளார். வாழ்க்கையில் செய்த தவறுகளைத் தாழ்மையுடன் ஒப்புக்கொண்டால் நீடிய மகிழ்ச்சியைக் காணலாம்.

KAMARAJ WOMENS COLLEGE

தன் பாகம் வேண்டுமெனத் தந்தையிடம் கேட்டவன்:

இளையவன் தீங்கு செய்ததில் முதல் முயற்சி, 'தன் பாகம் வேண்டும்' எனத் தந்தையிடம் கேட்டதாகும். தந்தையும் மகனின் விருப்பத்திற்கேற்ப, உடனே சொத்தினை வழங்குகிறார். தந்தையின் மனதும் துடித்தது. இருப்பினும் மகனுக்குப் பிடித்தவாறு வாழட்டும் என எண்ணினார்.

தடுமாற்றமும் தரம் தாழ்ந்த நிலையும்:

இளையமகன் தன் சொத்தோடு வெளிநாட்டில் குடி புகுந்தான். கண்இருந்தும் குருடனான இளைய மகன் கால் போன பாதையில் சென்றான். சொத்துக்களைக் குறைந்த விலைக்கு விற்றான். ஆடம்பரமான வாழ்க்கையை வாழத் தொடங்கினான். தீய நண்பர்கள் அவனுடன் சேர்ந்து மது அருந்துவதும் எனப் பொருட்களைச் செலவழித்தான். அவன் செய்ததவறு. உணவிற்கே வழியின்றி அலைய வைத்தது. வயிற்றுப் பிழைப்பிற்காக வேலை தேடித் திரிந்த அவனுக்கு பன்றிகளைப் பராமரிக்கும் வேலை கிடைத்தது. பன்றிகளுக்கு வைக்கப்படும் தவிடு தான் கெட்ட குமாரனுக்கு "உணவாகக் கிடைத்தது.

மகனின் வருகையை எதிர்பார்த்த தந்தை:

வீட்டின் மேல் தளத்தில் நின்று மகன் வருவது தெரிந்தது. மகனின் வருகையால் வீடு விழாக் கோலம் கொண்டது.மாலை வேளையில்மூத்த மகன் வீட்டிற்கு வந்து, மாற்றங்கள் நிகழ்ந்திருப்பது கண்டு கோபபடுகிறான். ஆத்திரத்தோடு வெளியில் மகன் நிற்பதைப் பார்த்த தந்தை, அவனருகில் சென்றார். மகனிடம் பொறுமையாகத் தந்தை விளக்கமளிக்கிறார் "என்னோடு என்றும் இருப்பவன் நீ உன் தம்பியோ இறந்த பின், உயிர் பெற்று மறுபிறவி எடுத்து வந்துள்ளான்" எனக் கூறினார். கடவுளின் அருள் ஒரு சகோதானுக்குக் கிடைக்கும்பொழுது மற்ற சகோதரர்கள்

KAMARAJ WOMENS COLLEGE

பொறாமைப்படக்கூடாது. பேராசையினால் பெரும் ஆழிவு கிடைக்கும் என்பதை இளைய குமாரன் மூலம் புரிய வைக்கிறார் கடவுள்.

KAMARAJ WOMENS COLLEGE

அலகு-V

பக்தி இலக்கியம்:-

சைவம்:-

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் பக்தர்களை, சைவ சமயம் சார்ந்தவர்கள் எனக் கூறுகின்றனர். 63 நாயன்மார்கள் பாடிய பக்தி பாடல்கள் பன்னிரண்டு திருமுறைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் இயற்றிய பாடல்கள் முதல் ஏழு திருமுறைகள் ஆகும். இவை 'தேவாரம்' என்னும் இனிய இசை பாடல்கள் ஆகும். மூவருடன் மாணிக்கவாசகரைச் சேர்த்து சைவ சமயக் குரவர்கள் என்பர்.

திருநாவுக்கரசர்:-

திருநாவுக்கரசரின் பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக வைக்கப்பட்டுள்ளது. திருவாமூரில் பிறந்தவர் தந்தை புகழனார், தாய் மாதினியார், தமக்கை திலகவதியார் வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார் திருஞானசம்பந்தரால் அப்பர் என அழைக்கப்பட்டார். சைவ சமயத்தில் இருந்து சமண சமயத்திற்கு மாறி தனது பெயரை தர்மசேனர் என மாற்றிக் கொண்டார். சூலை நோய்க்கு ஆட்பட்டு தனது தமக்கையின் வேண்டுகோளுக்கு இணங்கி சைவ சமயத்திற்கு மாறினார்.

"நாமாற்கும் குடியல்லோம்" என்னும் பாடலின் பொருள்:-

பல்லவ மன்னன் திருநாவுக்கரசரை மீண்டும் சமணத்திற்கு அழைத்தபோது இப்பாடலைப் பாடுகின்றார். நாம் வேறு யாருக்கும் அடிமை அல்லோம், எமனைக் கண்டு அஞ்ச மாட்டோம்.

KAMARAJ WOMENS COLLEGE

KAMARAJ WOMENS COLLEGE

நரகத்திற்குச் செல்ல மாட்டோம். பொய்யும் இல்லோம், என்றும் மகிழ்ச்சியுடன் வாழ்வோம். நோய் என்பதை அறியோம். வேறு யாரையும் பணியவும் மாட்டோம். எப்பொழுதும் துன்பமில்லாமல் இன்பமுடன் வாழ்வோம். எவருக்கும் அடிமையாகாத தன்மையுடைய நல்ல சங்குக் குழையை அணிந்த இறைவனின் பாதத்தைச் சேர்வோம். அன்று மலர்ந்த மலர்களை அவர் பாதத்தில் சேர்த்து சரணடைவோம்.

மாணிக்கவாசகர்:-

திருவாத ஊரில் அந்தணர் இனத்தில் பிறந்தவர். அரிமர்த்தன பாண்டியனிடம் "தென்னவன் பிரம்மராயன்" என்ற பட்டம் பெற்று அமைச்சராகப் பபணிபுரிந்தவர். 'வாதவூர் அடிகள்' என்ற பெயரும் இவருக்கு உண்டு. மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். பாண்டிய மன்னன் குதிரை வாங்குவதற்காக தந்த பணத்தில் இறைவனின் ஆலைய பணிக்கு செலவிட்டு மகிழ்ந்தார் இதனாலே நரிகளைப் பரிகளாக்கிய திருவிளையாடல் நடந்தது. மேலும் பிட்டுக்கு மண் சுமந்ததும் இவருக்காகவே. போன்ற திருவிளையாடல்களை இறைவன் இவருக்காக புரிந்தார். "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என இறைவன் கேட்டதால் அகத்துறைச் சார்ந்த 'திருக்கோவையார்' எனும் சிறப்பு நூலை எழுதினார்.

சிவபுராணம்

பாடல் -1

திருவைந்தெழுத்து வாழ்க, திருவந்தெழுத்தின் வடிவாக விளங்கும் இறைவனின் திருவடி வாழ்க, கண்ணிமைக்கும் நேரம் கூட என் நெஞ்சம் விட்டு பிரியாதவனுடைய திருவடி வாழ்க, திருவாடுதுறை ஆண்டவனும் குருவாகிய மாணிக்கத்தின் திருவடி வாழ்க, தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய

திருவடி வாழ்க, ஒருவனாகியும், பல உருவம் கொண்டு இருக்கும் இறைவனின் திருவடி வாழ்க.

பாடல்- 2

என்னுடைய மன ஓட்டத்தின் வேகத்தைப் போக்கி என்னை ஆட்கொண்ட மன்னனின் திருவடி வெல்லட்டும். பிறப்பினை நீக்குபவனாகிய தலைக்கோலம் உடைய பெருமான் அணி சேர்கழல்கள் வெல்லட்டும். தன்னை விடுத்து நிற்பவர்களுக்கும் எளிய பொருளாக உள்ள பெருமானின் பூப் போன்ற கழல்கள் வெல்லட்டும். கைகளைக் கூப்பி வழிபடுபவர் உள்ளத்தில் மகிழ்ந்து இருக்கும் மன்னனின் கழல்கள் வெல்லட்டும். தலை தாழ்ந்து வணங்குபவர்களை மிக உயர்ந்த நிலைக்கு ஓங்கச் செய்யும் பெருங்குணம் வாய்ந்தவனுடைய கழல்கள் வெல்லட்டும்.

பொய்கை ஆழ்வார்:-

முதலாழ்வார்கள் மூவரில் முதலாவதாக வைத்து போற்றப்படுபவர் பொய்கையாழ்வார். பிறந்தது காஞ்சிபுரத்தில் உள்ள திருவெக்கா என்னும் வைணவ தலம் திருமாலின் படைக்கருவிகளில் ஒன்றான பஞ்சந்நியம் எனும் சங்கின் அம்சமாக பிறந்தார். ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் தாமரை மலரில் தோன்றியவர் இவர் பாடியது முதல் திருவந்தாதி ஆகும். 100 வெண்பாக்கள் உள்ளன. திருமாலின் பத்து அவதாரங்களைப் பாடினார். "

"வையம் தகளியா" எனும் பாடலின் பொருள்:-

பூமியை அகலாகவும், பூமியை சூழ்ந்து இருக்கும் கடலை நெய்யாகவும், வெப்பமுடைய கிரகணங்களை உடைய சூரியன் விளக்காகவும், விளங்கும் சக்ராயுதத்தை உடைய எம்பெருமான் திருவடிகளில் என்னுடைய துன்பக்கடல் நீங்குமாறு வேண்டி இப்பாமாலையை சூட்டுகிறேன் என்று பாடினார்.

KAMARAJ WOMENS COLLEGE

KAMARAJ WOMENS COLLEGE

பூதத்தாழ்வார்:-

முதல் ஆழ்வார்களுள் இரண்டாமவர் பூதத்தாழ்வார். திருமாலை ஐம்பூதங்களாகக் கண்டவர். திருமாலை பூதம் என்று பாடியுள்ளார். "அன்பே தகளியா" என்னும் பாடல் வழியாக இருளைப் போக்கியவர்.

"அன்பே தகளியா" என்னும் பாடலின் பொருள்:-

அன்பை அகலாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், உருவகிக்கிறார். சிந்தனையை திரியாகவும் இடுகின்றார். ஒளி விடுகின்ற ஞானச் சுடரை ஞானத்தமிழ் கொண்டு ஏற்றுகிறார்.

பேயாழ்வார்:-

பிறந்த ஊர் மயிலாப்பூர். ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர். திருமாலின் கையில் உள்ள 'நந்தகம்' என்னும் வாலின் அம்சமாக பிறந்தார். இறைவனின் மீது மிகுந்த பக்தி கொண்டு பேய் போல் அன்பு கொண்டு ஆடிப் பாடியதால் 'பேயாழ்வார்' எனப் போற்றப்படுகின்றார். இவர் பாடியது மூன்றாம் திருவந்தாதி. இது 100 பாடல்களை உடையது. திருமாலோடு மட்டுமின்றி சிவனையும் திருமாலாக் காணும் சிறப்புடையவர்.

"திருக்கண்டேன்" எனும் பாடலின் பொருள்-

திருக்கோவிலூரில் ஒரு வைணவரின் வீட்டு விளக்கு வெளிச்சத்தில் பெருமானின் உருவத்தைக் கண்டு அதில் பொன்மேனியைக் கண்டேன் அவனது நிறம், சக்கரம், சங்கு முதலியவற்றைக் கண்டேன் என இறைவனின் திருக்கோலத்தைப் பாடுகின்றார்.

திருப்பாவை:-

ஆண்டாள்:-

பன்னிரு ஆழ்வார்களுள் ஒரே பெண் ஆழ்வாராக அமைந்தவர் ஆண்டாள் ஆவார். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். இவர் "திருப்பாவை" "நாச்சியார் திருமொழி" எனும் இரண்டு பாடல் தொகுதிகளை எழுதியுள்ளார். இறைவனுக்கு மாலை சூட்டியதால் இவரை சூடிக்கொடுத்த சுடர் கொடி என்று போற்றுகின்றனர்.

"மார்கழித் திங்கள்" எனும் பாடலின் பொருள்:-

அழகிய அணிகலன்களை அணிந்த கன்னியரே! சிறப்புமிக்க ஆயர்பாடியில் வசிக்கும் செல்வமிக்க சிறுமிகளே! மார்கழி முதல் நாளில் நம் நீராட கிளம்புவோம். கூர்மையான வேலுடன் நம்மைப் பாதுகாத்து வரும் தொழிலைச் செய்யும் நந்தகோபன், அழகிய கண்களை உடைய யசோதாபிராட்டி ஆகியோரின் சிங்கம் போன்ற மகனும், கரிய நிறத்தை உடைய சிவந்த கண்களை உடையவன். சூரியனைப் போல் பிரகாசமான முகத்தை உடைய நாராயணனின் அம்சமான கண்ணபிரான் நமக்கு அருள் தர காத்திருக்கின்றான். அவனை நாம் பாடி புகழ்ந்தால் இந்த உலகமே நம்மை வாழ்த்தும் எனப் பாடுகின்றார்.

திருமூலரின் - திருமந்திரம்

திருமூலரின் திருமந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறை ஆகும். தமிழில் முதல் முதலில் தோன்றிய யோக நூல் இது என்பது இதன் தனிச் சிறப்பு. முதல் சித்தர் திருமூலரே ஆவார். இவர் பதினெட்டு சித்தர்களில் ஒருவர் மட்டுமல்ல. அறுபத்து மூன்று நாயன்மார்களிலும் ஒருவர் ஆவார் திருமூலர். திருவாவடுதுரையில் ஓர் அரச மரத்தின் கீழ் மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். ஆண்டுக்கு ஒரு பாடல் என்று மூவாயிரம் பாடல்களை இவர்

KAMARAJ WOMEN'S COLLEGE

இயற்றினார் என்பர். 187 ஆவது பாடல் **“அன்பே சிவம்” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:**

அன்பாகிய சக்தி தேவியும், அறிவாகிய சிவபிரானும், இரண்டு ஆகும் என்பர் அனுபவம் அறிவும் அற்றவர்கள். அன்பு முதிர்ச்சி அடைந்தால், சிவம் ஆகிய அறிவு விளங்கும். இந்த உண்மையை உலகில் எவருமே அறிவதில்லை. அன்பின் முதிர்ச்சி அறிவை விளங்கச் செய்வதை அறிந்த பின் அன்பே வடிவாக மாறி அறிவாகிய சிவத் தன்மையை அடைவர். (270) 271.

“பொன்னைக் கடந்து” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:

பொன்னை வெல்லும் ஒளியுடைய புலித் தோல் அணிந்தவன்; மின்னல் போல் ஒளிரும் அழகிய பிறைச் சந்திரனைச் சூடியவன்; பிறை நிலவு பொருந்திய வெண்ணீற்றின் ஒளியில் விளங்குபவன். அந்தப் பெருமானிடத்தே சென்று பொருந்தியுள்ளது எனது பேரன்பு.274.

“என்அன்பு உருக்கி” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்: அன்பு கொண்ட உள்ளத்தை உருக்கி இறைவனை ஏத்துங்கள். முதன்மையான அன்பினை உருக்கி முதல்வனை நாடுங்கள். அப்போது இறைவனும் தன் அன்பைக் காட்டி நம் பந்த பாசங்களை அகற்றி விடுவான். அவன் அருளைத் தரும் விதம் இதுவே.275 **“தான்ஒருகாலம் சயம்பு என்று ஏத்தினும்” என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:**

சிவபெருமானை ஸ்வயம்பு என்று எண்ணிப் புகழ்ந்தால் அது வானத்தில் பொருந்தி வழிபடுபவருக்கு ஒரு நல்ல துணை ஆகும். தேன் போன்ற இன்மொழி பேசும் உமை அன்னையைத் தன் இடப் பக்கத்தில் கொண்டு, கொன்றை மலர்களை அணிந்த சிவன், என்

KAMARAJ WOMENS COLLEGE

அன்பு வலையில் வந்து அகப்பட்டுக் கொண்டான். இன்னதென்று கூற முடியாத வண்ணத்துடன் நின்றான்.284

"கண்டேன் கழல்தரு" என்று தொடங்கும் பாடல் கூறும் கருத்துக்கள்:

கண்டேன் தன் திருவடிகளைத் தரும் கொன்றை மலர் சூடியவன் இணையடி! கண்டேன் கரிய ஆணவ யானையின் தோலை அணிந்து கொண்டவன் கழலடி! கண்டேன் மூலாதாரத்தில் உள்ள தாமரையில் உறைவும் சிவன் திருவடி! அவன் கழல்கள் என் அன்பினுள் விளங்குவதை நான் கண்டேன்!

பட்டினத்தார்:-

பட்டினத்தார் புகார் நகர வணிகர் குலத்தில் பிறந்தவர். திருவெண்காடு என்னும் ஊரில் வாழ்ந்து வந்தார். ஆகவே 'திருவெண்காடர்' என அழைக்கப்பெற்றார். திருவிடைமருதூரில் வாழ்ந்து வந்த சிவசர்மர் என்று சிவ வேதியர் திருமணம் செய்து கொள்ள பணம் இல்லாமல் வருந்தினார். இறைவன் ஒரு திருப்பிள்ளையாகத் தோன்றி இதனை விற்றுப் பணம் கொண்டு திருமணம் செய்து கொள்கின்றான். அக்குழந்தை ஆயிரம் பொன் கொடுத்து வாங்கி 'மருதவாணன்' எனப் பெயர் சூட்டி பட்டினத்தார் வளர்த்து வந்தார். அவர் வளர்த்த அக்குழந்தை இறைவன் ஆதலால் திருவெண்காடு இல்லத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தியது. "காதறுந்த ஊசியும் வாராது கடை வழிக்கே" என்ற அறிவுரையை ஏற்று ஞானம் பெற்று பட்டினத்தார் பலப் பாடல்களை இறைவன் மீது பாடினார்.

"காடே திரிந்து" எனும் பாடலின் பொருள்:-

காட்டில் திரிந்து என்னவாக போகிறது. காற்று சுவாசித்து தான் என்ன ஆகப்போகின்றது. கந்தல் துணியை சுற்றிக்கொண்டு ஓட்டை

KAMARAJ WOMENS COLLEGE

கையில் எடுத்ததன் பயன் என்ன? மருதீசருக்கு மெய்யன்பு இல்லாமல் பெண்கள் தரும் சுகம் தான் பெரிது என்றும் அதுதான் சொர்க்கம் என்று இருப்பவர் உண்மையான வீட்டின் இன்பம் எப்படி அடைவார் என்கிறது இப்பாடல்.

"தாயும் பகை கொண்ட" என்ற பாடலின் பொருள்:-

தாய் போன்று உள்ள பெண்கள் பகை கொண்ட பின்னர் தான் பெற்ற பிள்ளைகளும் பகை கொள்வதும் இந்த உலகமே பகையாகி போவதும், நாம் உற்றார் உறவினர் கூட பணம் காசுக்காக பகை கொள்வதும், நம் உறவாக நினைப்பதும் எல்லாம் விட்டு செல்வதும் இவ்வுலக வாழ்வில் உண்மைதான் சிறப்பு என்கிறார்.

கடுவெளி சித்தர் பாடல்கள்:-

கடுவெளி என்பது வாக்கும் மனமும் கடந்த நிலையில் உள்ள பரவள்ளி இதனைப் பற்றிய பாடல்களை இவர் அதிகம் பாடியுள்ளமையால் இச்சித்தர் கடுவெளி சித்தர் என அழைக்கப்பட்டார். இவர் 15 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் பாடியது 34 கண்ணிகள் கொண்ட ஆனந்தக் களிப்பு இப்பாடல் பெரும் புகழ் பெற்றதனால் இத்தகைய யாப்புக்கு ஆனந்தக் களிப்பு என்ற பெயர் தமிழ் இலக்கியத்தில் நிலைத்து விட்டது.

பாடல் பொருள் விளக்கம்:- உன் வாழ்க்கையில் சாபம் யாருக்கும் கொடுத்து விடாதே நடக்கும் ஒவ்வொன்றும் விதிப்படிதான் நடக்கும். உன் வயிற்று எரிச்சல் அந்த மனிதனை துன்பத்திற்கு ஆட்படுத்தும் என்பதையும் அறிந்து கோபத்தை கட்டுப்படுத்து என்று அறிவுரை கூறுகிறார். சொல்ல முடியாத மோசத்தை செய்கின்ற சூது செய்தால் அது உன்னை மட்டுமல்ல உன் சுற்றத்தாரையும் முழுமையாக நாசப்படுத்தி விடும். இவ்வுலகின் மீது நீ பெரிதும் பாசம் கொள்ளாதே அதனிடம் கொஞ்சம் கூட பற்றும் இல்லாதவராக இருந்துவிட வேண்டும்.

KAMARAJ WOMENS COLLEGE

நீ சிவத்தின் மீது மட்டும் இச்சை வைத்தால் உனக்கு எமலோகம் இல்லை. நீ நல்ல வழிகளைத் தேடி நாடு ஒவ்வொரு நாளும் பரமனையே உள்ளத்தில் ஏற்றி அவன் அருளைத் தேடு நல்லவர்கள் கூட்டத்தோடு நீ சேர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார். நீ பிறர் மீது பொல்லாங்கு கொள்ளாதே கெட்ட நடத்தை ஆகிய பொய்மை மொழி பேசி கோள்கள் பொருந்துமாறு நீ நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். சிற்றின்பங்கள் உன்னை வாழ வைக்காது அவை துன்பத்தையே தரும் உண்மையான தவத்தின் ஞான அறிவைப் பெற்று அவ்வழியிலேயே செல்ல முயற்சி செய் அதுவே உன்னை ஆனந்தமாக வாழ வழிவகை செய்யும்.

பொய்யான வாழ்க்கையால், ஆடம்பரத்தால் எதையும் சாதிக்க இயலாது. புழுப்போன்ற துர்நாற்றம் வீசும் உடலை விட்டு இறைவனின் பால் அன்பை செலுத்தும் போது வீடு பேறு அடையலாம். ஐம்புலன்களால் இந்த உடம்பினை வெறுத்து உமாதேவியரின் கணவராகிய சிவபெருமானின் மீது பற்று கொள். உன்னுடைய வாழ்க்கையில் நான்கு வகையான கோட்டைகள் உள்ளன. அதில் பிறரிடம் கொள்ளும் பகையை மட்டும் விரட்டி விட்டால் நீயே இன்பம் என்கிற நாட்டை ஆளலாம். இவ்வுலகில் உயர்ந்தது பக்தி தான். அதைத் தவிர வேறு எதுவும் உயர்ந்தது அல்ல என்கிறார். அன்பு என்கிற நல்ல மலரை பிறரிடம் தூவு பரமானந்த இறைவனின் பாவத்தைச் சரணடைய வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் கள்ள வேதம் புனைந்து திரியாதே நட்பு கொண்டு இருந்துவிட்டு அந்த நட்புக்கு பங்கம் வரக்கூடியவற்றைச் செய்து பிரிந்து சென்று விடாதே நற்செயல்கள் எந்த வகையில் இருந்தாலும் அவற்றைக் கற்று நன்கு அறிந்து அவற்றில் உள்ள நல்ல நெறிகளை நீ பிறருக்கு போதனை செய். என ஒவ்வொரு பாடலிலும் பாவம் செய்யாது இருக்க வேண்டும்

KAMARAJ WOMENS COLLEGE

என்று இறைவனை எவ்வாறு சரணடைய வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறுகின்றார்.

இராவண காவியம்

இராவண காவியம் என்ற நூலினை எழுதியவர். புலவர் குழந்தை. இராமாயணத்தின் முரண்பட்ட கதாபாத்திரமாக அடையாளம் காணப்பட்ட ராவணனை கதைத் தலைவனாகக் கொண்டு உருவானது இந்நூல் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் உருவான மிகச்சிறந்த காப்பியம், 5 காண்டங்கள் உடையது 2828 பாடல்கள் உள்ளன.

பாடலின் பொருள்:-

கல்வி பற்றிக் கூறும்போது கல்வி வளத்தில் அனைவரும் சிறந்தவர்களாக இருந்ததை விளக்கி கூறுகிறார். பழங்கால தமிழகத்தில் கையில் எவரும் ஏடு இல்லாமல் இருந்ததில்லை. கலைகள் அறியாமல் யாரும் இருந்ததில்லை. நடனம் ஆடக்கூடியவர்கள் கலைகளின் பயனைப் பற்றி அறியாதவர்களும் இல்லை. நற்றமிழின் வளர்ச்சியை விரும்பாதவர்கள் இந்நாட்டில் ஒருவரும் இல்லை என்று ககூறுகின்றார். தாய்மொழியானது இரு கண்ணின் பார்வையாகும். தமிழ் மொழி எனது உருவத்திற்கு போர்த்திக் கொள்ளும் பாதுகாப்பான போர்வை என தமிழில் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். நாடு முழுவதிலும் புலவர்களின் கூட்டம், நகரங்கள் அனைத்திலும் பள்ளிகளின் பெருக்கம் அதிகமாகிவிட்டது. வயல் நிலங்கள் எல்லாம் கூட தமிழ் மொழிப் பாடல்கள் தான் ஒலிக்கின்றன. திரும்புகின்ற திசைகளில் எல்லாம் தமிழ் மொழி பேசுவோர் ஓசை கேட்கின்றது தமிழ் மொழியைப் பயிலாதவர்கள்

KAMARAJ WOMENS COLLEGE

உணவு உண்ண மாட்டார்கள் தங்கம் பட்டாடைகளை அணிய வேண்டும் என்று எண்ண மாட்டார்கள். தமிழ் மொழியைப் பயின்றால் தான் மனமகிழ்வைத் தரும் எல்லா செயல்களிலும் ஈடுபடுவார். விலை மதிப்பு மிக்க அனைத்து பொருட்களை காட்டிலும் உயர்வானது. தமிழ்மொழி, தமிழை வளர்ப்பதற்கான வழிகள் அனைத்தையும் அறிந்து அதற்காக அனைத்து பொருட்களையும் அர்ப்பணித்து உயர்வான தாய்த் தமிழை மக்கள் வளர்த்துள்ளனர் என்பதை தனது பாடல் வழியாக விளக்குகின்றார்.

KAMARAJ WOMENS COLLEGE